இவ்வரசு வலியுறுத்தியது. இதன் முதல் நடவடிக்கையாக மாமல்லபுரத்திலிருந்து தென் ஆற்காடு மாவட்ட எல்லை வரை 25 மைல் நீளமுள்ள சாலைத் தொடர்பு அறுபட்ட பகுதியை அமைப்பதற்கான வேலை எடுத்துக்கொள்ளப்பட்டது. கிழக்குக் கடற்கரைச் சாலை அமைப்பில் கோவளத்துக்கு அருகே உப்பங் கழியின்மீது பாலம் கட்டும் வேலையை மேற்கொள்வதற்கும் இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. ந. தருமலிங்கம் : இந்த சேதுச்சாலையையொட்டி தஞ்சை மாவட்டத்தில் தென் பகுதியில் தஞ்சை மன்னர்கள் ஆண்ட காலத்தில் கட்டி வைக்கப்பட்ட சத்திரங்கள்—அம்மணிசத்திரம், ராஜாமடம் சத்திரம்—போன்ற சத்திரங்கள் கவனிப்பாரற்றுக் கிடப்பதையொட்டி இந்த சாலை அமைக்கப்படும்போது அவை களையும் புனரமைப்பு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய செயற் குறிப்பு இல்லை.

பரமக்குடி பயணியர் விடுதி

*341 **வினா—திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் உள்ள பயணியர் விடுதியை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Educational finance of Panchayat Union Councils

*342 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether the Government have constituted a ten-member Committee to review the educational finance of the Panchayat Union Councils in the State; and

(*b*) if so, the names of those members?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) (1) அரசுச் செயலாளர், கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறை—தலைவர்.

அரசு சார்புள்ள உறுப்பினர்கள்.

(2) கிராம வளர்ச்சித் துறை இயக்குநர்.

(3) அரசுத் துணைச் செயலாளர், கல்வித் துறை.

(4) துணைச் செயலாளர் (திட்டம்), நிதித் துறை.

(5) பள்ளிக் கல்வி இயக்குநர்.

(6) உள்ளாட்சி நிதிக் கணக்குகள் ஆய்வாளர்.

(7) கிராம வளர்ச்சித் துறை (கல்வி) இணை இயக்குனர்—செயலாளர்.

அரசுச் சார்பற்ற உறுப்பினர்கள்.

(8) திரு. எஸ். கிருஷ்ணசாமி பிள்ளை (ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி).

(9) திரு. எம். ஸ்ரீராமுலு, தலைவர், மாநில ஊராட்சி ஒன்றியங்கள் கூட்டமைப்பு.

(10) திரு. பி. என். பரமசிவம், எம்.எல்.ஏ., செயலாளர், மாநில ஊராட்சி ஒன்றியங்கள் கூட்டமைப்பு.

திரு. கே. விநாயகம் : இந்தக் குழு இந்த விஷயத்தில் ஆராய்ந்ததா ? அப்படி ஆராய்ந்திருந்தால் அவர்களுடைய முடிவு என்ன ? அந்த முடிவின்படி நம் சர்க்காருக்கு ஏதாவது செலவு இருக்கிறதா ? அந்த முடிவுகளை அமல்படுத்துவதற்கு எவ்வளவு நாட்களாகும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்தக் குழு தன் ஆய்வுகளை மிக வேகமாகச் செய்து கொண்டிருக்கிறது. 30—4—70-க்குள் அவர்கள் அறிக்கை கொடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அவர்களின் அறிக்கை வந்த பிறகு அதைப் பரிசீலித்து அதன் மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதுபற்றி யோசிக்கலாம்.

திரு. வை. சுவாமிநாதன் : இந்தக் குழு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் சென்று யூனியன் தலைவர்களைச் சந்தித்து அவர்களுடைய கருத்துக்களை ஆராய்ந்ததா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் என்றால் அதற்கு ஏறத்தாழ இரண்டு ஆண்டு காலம் ஆகக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே மாவட்டவாரியாகச் சென்று ஆங்காங்குள்ள ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் மற்ற ஏனைய அலுவலகங்களையும் சார்ந்தவர்களையும் கலந்து அவர்களுடைய கருத்துக்களையும் பெற்றுவருகிறது.

திரு. எம். சுரேந்திரன் : இந்தக் கல்வி நிதியை மறு ஆய்வு செய்வது சம்பந்தமாக மாவட்ட அபிவிருத்தி மன்றங்களில் விவாதிக்கப்பட்டு அவர்கள் இது சம்பந்தமாக ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்களே, அந்த ஆலோசனைகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாவட்ட ஆலோசனை மன்றங்களிலும் இதற்குத் தொடர்பானவர்கள்தான் பொறுப்பில் இருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களையும் இந்தக் குழு பரிசீலிக்கும்.

1970 மார்ச் 12]

திரு. இல. பலராமன்: இந்த சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கம் இந்தக் கல்வி மானியத்திற் காக எவ்வளவு ஒதுக்கீடு செய்கிறது? அது நல்ல முறையில் பயன் படுத்தப்படுகிறதா என்ற விவரங்களை அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கிடைக்கக்கூடிய எந்தத் தொகையையும் நல்லமுறையில்தான் பயன்படுத்துகிறோம். ஆனால் எவ்வளவு தொகை கிடைக்கிறது என்ற விவரம் இல்லை.

பனையப்பட்டிக்கு பேருந்து நிலையம்

*** 343 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள பனையப்பட்டியில் பேருந்து நிலையம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) & (இ) பனையப்பட்டி பஞ்சாயத்து அவ்வூரில் ஒரு பேருந்து நிலையம் கட்டுவதற்காக ரூ. 21,700 அரசினரிடம் கடன்கேட்டு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளருக்கு செயற்குறிப்பு அனுப்பி உள்ளதாக, மாவட்ட ஆட்சியாளர் அறிவித்துள்ளார். அந்த செயற்குறிப்பு கிராம நல இயங்குநர் வழியாக அரசினருக்கு வந்தவுடன் கடன் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, திருமயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பனையப்பட்டியில் பேருந்து நிலையம் அமைப்பது சம்பந்தமாக மாவட்டத் தலைமையிடம் மீண்டும் கேட்டு விரைவில் அமைத்துத்தர அரசு முற்படுமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: புதுக்கோட்டை உதவி ஆட்சியாளர் கடன் கோரிக்கையை மாவட்ட ஆட்சியாளரின் வழியாக அரசுக்கு அனுப்பியுள்ளதாகத் தகவல் கிடைத்தது. மேற்கண்ட கடன் கோரிக்கை இந்தத் துறைக்கு வந்து சேர்ந்ததும் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

புதுக்கோட்டைப் பகுதியை மேம்படுத்த நிதி ஒதுக்கம்

*** 344 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்டார வளர்ச்சித் திட்டம் (Area Development Scheme) என்பதின் கீழ் மிகவும் பிற்பட்ட புதுக்கோட்டைப் பகுதிக்கு அரசு, கூடுதல் நிதி ஒதுக்கித் தரவேண்டுமென்று, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் 1968-69, 1969-70ல் ஏதேனும் குறிப்பு அனுப்பப்பட்டுள்ளதா ?